59

தாரண௵ | ஸ்ரீ: | ஸம்புடம் - 3
ஆவணி - புரட்டாசிமீ | | ஸஞ்சிகை - 9

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

"அஹோபிலே காருடசைலமத்யே க்ருபாவசாத் கல்பிதஸந்நிதாநம் |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம் லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ||"

பக்கம்

விஷய ஸூசிகை :—1. ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம் 245
2. 'அந்தப் பையன் கேட்ட கேள்வி' 247
3. ஸ்ரீ அத்திப்பட்டு அழகிய சிங்கர் ப்ரபாவம் 248
4. செய்திகள் 250
5. பஞ்சாங்க ஸங்க்ரஹம் 250
6. ஸம்பாதகரின் குறிப்புக்கள் 251

ஸ்ரீ:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[4-ஆம் அங்கம்]

[ஸ்ரீ. உப. அன்பில் வி. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L.,]
[அட்வோகேட், திருச்சி]

[ஸம்புடம் 3, ஸஞ்சிகை 7, பக்கம் 210-ன் தொடர்ச்சி]

...துதான் நல்ல ஸமயம். நாலு ஸமுத்ரங்களையும் மகிழச்செய்து ...ய்யும் சந்த்ர தேஜஸ் உதிக்கிறது. நம் கட்டழகிகள் முகத்திற் ... சந்த்ர கிரணங்கள் கிளம்பிச் சந்த்ரன் வரவைத் தெரிவிக்கின் ...ச ஶ்ருங்காரம்! என்ன மோஹ பாரவஶ்யம்! திவ்யமான ...ந்தநக் குழம்பை இந்த்ர திக்காகிய கிழக்கு எனும் பெண்ணின் ...ணக் கைகளால் பூசும் ரஸத்தைப் பார்த்து ராத்ரி யெனும் பெண் ...வண்மைபோல ராத்ரி இருட்டெல்லாம் வெண்மை யடைந்துளது.

...ா, க்ரோதா! எனக்குச் சேர்ந்திருக்கும் ஸஹாய ஸம்பத்தியைப் பார். [இங்கு ...' யெனும் சப்தம் மரணத்தையும் சொல்லும். இப்படிக்கு அநிஷ்ட ஸூசகமும் ஸ்வாமிக்குத் திருவுள்ளம்.]

“ ताराकान्तः प्रियसुहृदयं चन्द्रिकेयं वयस्या बाणारंभाद्द्रुमतिपदं बान्धवो मे वसन्तः ।
त्वं च त्राता विपदुपगमे क्रोधदुर्वारवेगः को वा मह्यं कुसुमधनुषे तिष्ठते जीवितार्थी ॥”

இருபத்தேழு தாரைகளை (நக்ஷத்ரங்களாக) ஒரொரு ராத்ரி ஒருத்தியாகக் கூடி அநுபவிக்கும் சந்த்ரன் என் ப்ரிய நண்பன். எங்கும் பரவிக் காமத்தைப் பற்றவைக்கும் சந்த்ரிகை என் தோழி. எனக்குப் புஷ்ப பாணங்களை யதேஷ்டமாய்ப் புஷ்பிக்கத் தொடங்கி எனக்குக் கொடுத்துக்கொண்டே யிருக்கும் இவ்வஸந்தன் என் பிறவி பந்து. ஏதாவது விபத்து வந்தால் ப்ரசண்ட கோப வேகத்தோடு கூடிய கோப மூர்த்தியான நீ என்னைப் பாதுகாப்பவன். இவ்வளவு ஸஹாய பலமுடைய புஷ்ப பாணனாகிய என்முன்னே உயிரை விரும்பும் எவன்தான் தன்னை எதிரியென்று காட்டிக்கொள்வன்? என்னை எதிர்க்காமல் எனக்கு அடிமையாய்ப் பவ்யனாயிருந்தால்தான் பிழைக்கலாம்.

க்ரோதன்—நமக்குத் தைவம் அநுகூலமாயிருக்கையில், அது எதைத்தான் நமக்கு அநுகூலமாகத் திருப்பிவிடாது?

“ विजेतुकामः कामं त्वां निष्काम इति का कथा ।
त्वन्निवर्तननिष्कामः सकामस्त्वय्यनुज्झिते ॥”

காமனாகிய உன்னை ஜயிக்கும் காமத்தோடு ஒருவன் உன்னை ஜயிக்க முயல்வனேல், ‘உன்னை ஜயிக்கவேணு’ மென்னும் காமத்திற்கு அவன் வசப்பட்டு விட்டதால், அவன் எப்படி காமங்களை யெல்லாம் துறந்த நிஷ்காம னாவான்? ஆகையால் காமங்களை ஜயித்து நிஷ்காமனாவ தென்பதே ஒருக்காலும் ஸாத்யப்படாது. உன்னை விடுவதில் காமம் கொள்ளாவிடில், நீ விடாமல் ஒட்டி யிருப்பதால் அவன் ஸகாமனே.

காமன்—வீண்போது போக்கக்கூடாது. புருஷன் ஸமாதியை ஆரம்பிக்கிறான். நாம் உடனே அவனை நெருங்கவேணும். [அப்படியே நெருங்குகிறார்கள்.]

வஸந்தன்—இதோ பார். ஸமாதி நிஷ்டை தொடங்கும் புருஷனை இவன் மநஸ்ஸு பரம புருஷன் திருவடிகள் இரண்டின் நடுவில் இருந்துகொண்டு, அவ்விரண்டோடும் ஒட்டிக்கொண்டு அகலாமலிருக்கிறது; அவற்றில் ராக மிகுதியால் பாஹ்ய விஷயங்களில் ஓடாமலிருக்கிறது. விவேகன் இப்படி இவனைப் பழக்குகிறான். நமக்குப் பயத்தைத் தரும் வைராக்ய க்ரந்தங்களை நிரம்பப் படிக்கிறான். அடிக்கடி தூங்குகிறான். தன் ஆத்ம ஸ்வரூபத்தையும் ஸாக்ஷாத்தாய்க் காண்கிறான். தேஹத்தையும் க்ரமப்படி உபசாரம் செய்கிறான். ‘துக்க ஸமுத்ரம் எப்பொழுது தொலையுமோ?’ என்று ஆசையும் படுகிறான். ஸுகத்தையும் விரும்புகிறான். இப்படி இருவிதமான போக்குகளால் துயரப்பட்டுக்கொண்டு இவன் மனம் ஊசலாடுகிறது.

காமன்—தோழா, க்ரோதா! இன்னும் நம்மால் ஆட்டிவிடக்கூடிய ஸ்திதியில்தான் இருக்கிறான் புருஷன். விஷய ஸம்ஸர்க்கத்தை அவன் தள்ளினாலும், அநாதி காலாநுபவங்கள் கெட்டியாய் மநஸ்ஸில் படிந்திருக்கும் த்ருடமான விஷய வாஸனைகளைத் தள்ளுவது ஸாத்யமல்ல. அந்த வாஸனைகளைக் கொண்டு நாம் அவனை ஜயிக்கவேணும். ஸம்ஸாரக் கடலைத் தாண்ட எண்ணி ஜனக் கூட்டத்தை வெறுத்து ஏகாந்தத்தைத் தேடி யோகிகளோடு ஸல்லாபங்கள் செய்துகொண்டு யோகப் பயிற்சி செய்தாலும், கெட்டியா யுறைந்து கவசம்போல் இருக்கும் அநாதி த்ருட வாஸனையோடுகூடிய அவன் மனமே நமக்குப் பக்கபலமா யிருந்து நூற்றுக்கணக்கான மமதா வாஸனைகளில் திருப்பிவிடும். மநஸ்ஸில் பிறந்த எனக்கு மநஸ்ஸின் போக்குகள் நன்றாய்த் தெரியும்.

வஸந்தன்—இதொன்று நீங்கள் இருவரும் கவனிக்க வேணும். எல்லா ஸங்கங்களையும் ஒழித்தாலும் ‘நான்’ எனும் அஹங்காரம் போகாது. ‘தன்னை எல்லாரும் பூஜிக்கவேணும்; தன்னை ஒருவரும் அவமதிக்கக் கூடா’தென்றே ஆசை யிருக்கும். ஸம்மாநத்தில் ஆசையில்லாதவர் இல்லை. துளி அவமாநம் செய்தால், உடனே சீறிக் கோபன் வசமாகாதவர் இல்லை. இந்த ரந்த்ரத்தை நாம் பிடித்துக் கொள்ளவேணும். கோபன்தான் இதை ஜாக்ரதையாய்க் கவனித்துத் துளி அவமதிப்பு வந்தபோது உடனே புகுந்துகொள்ளவேணும். ஸம்வர்த்தர், ஜடபரதர், விதுரர் முதலிய பெரியோர்கள், தங்கள் பாவங்கள் கழியவேணு மென்று பிறர் தம்மை அவமாநம் செய்வதையே நாடிப் பைத்யக்கார வேஷம் போட்டு ஸஞ்சரித்தார்கள்.

காமன்—ஏன் இப்படி வீரத்தன மில்லாதவன்போல் பயப்படுகிறாய்? போகத்தைப் பெருக்கும் ஸ்ரக் சந்தந புஷ்ப மலயமாருதம் முதலிய ஸம்ருத்திகளையுடைய உயர்ந்த ருதுவான நீ எங்கள் தோழன். தேவர்கள், மநுஷ்யர்கள், ஜந்துக்கள் எல்லாம் கைவசமுள்ள அக்காமனே நான். பயங்கர க்ரூர ஸ்வபாவமுள்ள இந்த க்ரோதன் நம் சத்ருவை விடான். நாம் மூவரும் சேர்ந்து, அஸ்வத்தாமா முதலியவரைப்போல் தூங்கும்போது எதிரிகளைக் கொலை புரியவேணும்.

க்ரோதன்—[மீண்டும் மீண்டும் ஹாஹாகாரத்துடன்] க்ருஹம் பூமி தநம் முதலிய பரிக்ரஹங்களை விட்டாலும், விஷயங்கள் இவனை விட்டாலும், கந்தைத் துணி தர்ப்பாஸநம் கமண்டலு முதலிய சிறு பொருள்களை யாராவது எடுத்துக் கொண்டு போய்விட்டாலும், அவற்றை ஒளித்து வைத்தாலும், அதிலிருந்து கலக்கம் கலவரம் முதலியன ஏற்பட்டு மனத்தின் அமைதி அழியும். மஹேஶ்வரர் முதலிய மஹாபுருஷர்களுடைய சித்தத்தையும் கலைத்து, அவர்களை என் வசமாக எத்தனைகால் செய்திருக்கிறேன். புருஷனுடைய சித்த ஸமாதியைக் கலைப்பது எனக்கு ஒரு ஆச்சர்யமா?

காமன்—தோழா! கோபன் கோபாவேசத்தோடு பேசினலும், அவன் பேசுவது உண்மையே. மற்றென்றும் நீ கவனிக்கவேணும். பொய்யா மொழியரான வால்மீகி போன்ற மஹர்ஷிகளும் உத்கோஷம் செய்திருக்கும் என் மஹிமையை லகுவாக நினையாதே. விராத னென்னும் யானைக்கு ஸிம்ஹமும், ஒரு பாணத்தின் அக்நியால் ஸாகர தஹநம் செய்தவரும், ஏராளமான கர தூஷண ராக்ஷஸ ஸேநாவ்யூஹத்தை த்வம்ஸம் செய்தவரும், தஶகந்தரனுடைய பத்துத் தலைகளைப் பூக்கொய்வதுபோல் கொய்தவரும், கும்பகர்ணனைச் சிதைத்தவருமான ராகவன், என் அஸ்த்ரங்களால் அடிபட்டு, எனக்கே சொல்வதற்கு வெட்கமாயிருக்கும் லாகவங்களில் விழவில்லையா? ராகவன் லாகவத்தில் ஆழ்ந்தாரென்று ரஸம். 'ரகவோ லகூக்ருதா:' என்று போஜசம்பு. 'ரலயோ ரபேத:' என்பர்.

வஸந்தன்—'நீங்கள் இருவரும் துர்ஜயர்தான். ஆயினும் ஸஹாயங்கள் அதிகமாயிருப்பதுதான் ஜயத்தை நிச்சயமாய்த் தரும்.' இப்படிச் சொல்லிக்கொண் டிருக்கையில், லோபன் அவனுக்கு ப்ரியமான வேசி த்ருஷ்ணையோடு வருவதைப் பார்த்து லோபனை வர்ணிக்கிறான்.

கீதையில் பதினாறுவது அத்யாயத்தில் காமம் க்ரோதம் லோபம் இம்மூன்றும் நரகத்திற்கு த்வார மென்றும், இம்மூன்றையும் அடியோடு விடவேண்டு மென்றும் கூறப்பட்டது.

"त्रिविधं नरकस्यैतद्द्वारं नाशनमात्मनः । कामः क्रोधस्तथा लोभस्तस्मादेतत्त्रयं त्यजेत् ॥
एतैर्विमुक्तः कौन्तेय तमोद्वारैस्त्रिभिर्नरः । आचरत्यात्मनःश्रेयस्ततो याति परां गतिम् ॥"

என்று பகவத் வாக்யம். 'அதி கோரமான நரகத்திற்கு இவை காரணமாவதால் இவற்றைத் தூரத் தள்ளவேணும்' என்று பாஷ்யம். 'ரௌரவாதி நரகங்கள் கோரமானாலும் அந்த நரகாநுபவத்தால் பாபச் சுமை கழியும். இம்மூன்றுமோவெனில் பெரும் பாபங்களை ஸம்பாதித்துக்கொண் டிருப்பதால் அதிகோர மென்று பாஷ்யகாரர் திருவுள்ள'மென்று ஸ்ரீ தாத்பர்ய சந்த்ரிகை. இம்மூன்றிலுமிருந்து முக்தனுகித்தான் முக்தி யோக்யதை வருமென்று கீதை உரைத்ததை அநுஸரித்து, இங்கே ஜயிக்க வேண்டிய விரோதிகளில் காம க்ரோதத்தோடு லோபத்தையும் சேர்க்கிறார். 'லோப: ஸர்வகுணாந் ஹந்தி' என்பர். எத்தனை குணங்கள் இருந்தாலும், லோபம் என்னும் தோஷம் அத்தனை குணங்களையும் மறைத்துவிடும். "அளப்பரும் பிணிப்புறு வுலோப மொன்றுமே, அளப்பரும் குணங்களை யழிக்கு மாறுபோல்" என்பர் கம்பர். [தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

"அந்தப் பையன் கேட்ட கேள்வி"

[ஸ்ரீ. உப. பண்டிட் N. சேஷாத்ரி தாதாசார்யர் சிரோமணி, தஞ்சை]

"ஓ! நமனே! இச்சிற்றின்பங்களைக் காட்டி என்னை ஏமாற்றிவிடலா மென நினைத்தீர்போலும். இந்த அரம்பை ஊர்வசி முதலிய செல்வங்களை நீரே வைத்துக்கொள்ளும். நான் கேட்ட 'கேள்விக்கு விடை வேண்டும்" என்றவுடன் நமன் மனம் கலங்கிற்று.

சிறிய திண்ணை. அருகில் பெரிய திடல். நாற்புறமும் வாழை மரங்களும், ஈச்சங் குலைகளும், தேங்காய்க் குலைகளும், தோரணங்களும் கட்டப்பட்ட ஒரு பெரிய பந்தல். அந்தணர்களின் மறையொலி வானைப் பிளந்து நிற்கிறது. வேள்வியின் புகை, மேகம் போல் நாற்றிசைகளிலும் படர்கிறது. அந்தணர் பலர் பந்தலுக்குள் சென்றுகொண்டும் வந்துகொண்டும் இருக்கிறார்கள். இந்த வைபவத்தில் தக்ஷிணை கொடுக்கும் ஸமயம் வருகிறது. ஒவ்வொருவரும் தக்ஷிணையைப் பெற்றுக்கொண்டு முகமலர்ச்சியுடன் வெளியில் சென்றுகொண்டிருக்கிறார்கள். ஆனல் இப்பெரிய வேள்வியில், அச்சிறிய திண்ணையில் ஒரு சிறிய பையன் உட்கார்ந்துகொண்டு ஆழ்ந்த சிந்தனையி லிருக்கிறான். "இந்தப் பையன் ஏன் இவ்வாறு கவலையுட னிருக்கிறான்? வேள்வியில் இவனுக்குத் தக்ஷிணை கிடைக்கவில்லைபோலும்! இச்சிறுவனுக்கு யார் தக்ஷிணை கொடுப்பார்?" எனப் பலவிதம்

பேசிக்கொண்டு அவ்வந்தணர்கள் செல்லுகிறார்கள். பையனை மட்டும் அவன் மனது, "ஏன் உன் தகப்பனார் இவ்வாறு வீட்டிலுள்ள பொருள் யாவற்றையும் தக்ஷிணையாகக் கொடுக்கிறார்? வேள்வியின் விதியா? அல்லது அன்பின் பெருக்கா?" எனப் பலவித கேள்விகளைக் கேட்டுக்கொண்டிருந்தது. திறமையற்ற மாணவன் ஆசிரியருக்கு விடையளிக்க முடியாமல் தவிப்பதுபோல் தவித்துக்கொண்டிருந்தான் அவன்.

சிறிது நேரத்திற்கெல்லாம் "நசிகேதஸ் நசிகேதஸ்" என்ற குரல் வேள்விப் பந்தலிலிருந்து கேட்கிறது. உடனே அச்சிறுவன் தாவித் தகப்பனாரிடம் ஓடுகிறான். தகப்பனாரும் பையனைப் பார்த்து, "இதுகாறும் எங்குச் சென்றிருந்தாய்? இப்பெரியோர்களை வணங்கு; புனிதமான இவ்வேள்விப் புகையை முகர்" என்பதாகக் கூறித் தன் அருகில் உட்காரவைத்துக் கொண்டார். பையனும் அடக்கத்துடன் அருகில் உட்கார்ந்துகொண்டான். அவன் மனது மட்டும் அவனை விடாமல் அக்கேள்விகளைக் கேட்டுக்கொண்டே இருந்தது. அப்பொழுது அவன் தகப்பனார், "வீட்டு வாசலில் நீராட்டி, மஞ்சளும் குங்குமமும் பூசப்பட்ட மோழைப் பசுவையும் பால் மறுத்துப்போன பசுவையும் அவிழ்த்துக் கொண்டுவா" எனக் கட்டளையிட்டார்.

பையனுக்கோ இன்னும் பன்மடங்கு ஐயம் வளர ஆரம்பித்துவிட்டது. தந்தை சொல் தட்டாத அச்சிறுவனும் அவைகளை அவிழ்த்துக்கொண்டு வந்து தகப்பனார் முன்னிலையில் நிறுத்தினான். உடனே பையனும் தன் ஐயத்தைப் போக்கிக்கொள்ள விருப்பங் கொண்டவனாய் ஒருவாறு மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு, "அப்பா! இந்த உபயோகமற்ற பசுக்களை ஏன் இவர்களுக்குக் கொடுக்கிறீர்? இவைகளால் இவர்களுக்கு என்ன பயன்? வேள்வியின் விதி இவ்வாறு இருக்குமானால், பயன் படக்கூடிய என்னைத் தக்ஷிணையாகக் கொடுக்கக்கூடாதா? என்னை எவருக்குக் கொடுக்கப் போகிறீர்?" என அச்சத்துடனும் அடக்கத்துடனும் கேட்டான்.

'பையன்' என்ற அவமதிப்பால் தகப்பனார் அவன் கேள்விக்குப் பதில் கூறாமல் இருந்தார். 'தகப்பனார் காதில் தான் கூறியது விழவில்லைபோலும்' என நினைத்து, ஒரு முறை இரு முறை மும்முறையுங் கேட்டான். இயற்கையில் குளிர்ச்சியான தண்ணீர் நெருப்பின் சேர்க்கையால் சூட்டைப் பெறுவதுபோல் மிகவும் சினத்துடன், "உன்னை நமனுக்குக் கொடுத்தேன் போ" எனக் கூறினார். "இந்த வேள்வியில் நாமும் பயன் பெற்றோமே; அதிலும் தர்மதேவதையான நமனுக்குப் பயன்பெற்றோமே" என அகமகிழ்ந்து, நமன் பட்டணம் செல்ல ஆரம்பித்தான் பையன். பிறகு தகப்பனாரும், நெருப்பின் சேர்க்கை நீங்கின தண்ணீர்போல் இயற்கையான குணத்தைப் பெற்று, அறியாமையால் கூறியதை நினைந்து நினைந்து மனமுருகி, பிள்ளை நமனுலகம் செல்வதைத் தடுத்தார். உடனே பிள்ளை தந்தையைப் பார்த்து, "நீர் இவ்வாறு கூறுதல் முறையோ? நீரே பத்துவிதமான சொல்லை உரைத்தீரானால், மற்றவர்கள் ஏன் பதினாயிரம் சொல் கூறமாட்டார்கள்? நல்லோர்கள் செய்வதைக் கூறுவார்கள்; கூறுவதைச் செய்வார்கள் அல்லவா? உமது முன்னோர்களைச் சற்றுச் சிந்தித்துப் பாரும்" எனக் கூறித் தகப்பனாரிடம் விடை பெற்றுக் கொண்டு நமனுலகம் சென்றுவிட்டான். [தொடரும்.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ அத்திப்பட்டு அழகிய சிங்கர் ப்ரபாவம்

[ஸ்ரீமதி ராஜலக்ஷ்மி, பஸவங்குடி, பெங்களூர்]

"தோற்றக் கேடவை யில்லவ னுடையா னவனொரு மூர்த்தியாய்
சீற்றத் தோடருள் பெற்றவ னடிக்கீழ்ப் புகநின்ற செங்கண்மால்
நாற்றத் தோற்றச் சுவையொலி யுறலாகி நின்றவெம் வானவ
ரேற்றையே யன்றி மற்றொரு வரையா னிலேனெழு மைக்குமே."

[திருவாய்மொழி 3—6—6]

ஸர்வேஸ்வரன் கர்மத்திற்கு உட்பட்டவனன்று. ஆகவே அவ்வச்சுதனைப் பிறப்பு, இறப்பு, பசி, தாகம், பிணி, மூப்பு முதலிய துன்பங்கள் அணுவளவும் அணுகா. ஆனால் அவன் ப்ராணிகளின் கர்மத்திற்குத் தக்க தேஹத்தை அளித்து உலகமாகிய நாடக மேடையில், ஊழ்வினையின் பயனை உண்ணுமாறு ஆட்டிவைக்கும் வல்லமை வாய்ந்த ப்ரபு. சிந்தைக்கும் சொல்லுக்கும் எட்டாத அத்திருமால், தன்னொருவனையே தஞ்சமென்று அடைந்த பரமபக்தன் ப்ரஹ்லாதன் வாக்கையும் ஸகல வஸ்துக்களிலும் தான் நிறைந்திருப்பதையும் மெய்யாக்க விரும்பி, மனிதனுமின்றி ம்ருகமுமின்றி ஓர் அற்புத அழகிய நரசிங்க மூர்த்தியாய் அசேதநமாகிய கம்பத்தில் வந்து தோன்றினார். குழந்தை ப்ரஹ்லாத

னிடம் கொண்ட வாத்ஸல்யத்தையும் பகைவன் ஹிரண்யனிடம் கொண்ட ஆருச் சினத்தையும் சிங்கப்பிரான் செந்தாமரைக் கண்களே காட்டின. உருக்கிய பொன்னை ஒக்கும் ஜ்வலிக்கும் கண்கள்; பயங்கரமாகிய பிடரிமயிர் தொங்கும் திருமுகம்; நீண்டு கூர்மையாகிய கோரைப் பற்கள்; தீட்டிய கத்திபோல் பளபளவென ஜ்வலிக்கும் நாக்கு. இவைகளைக் கண்டு அரக்கன், 'நாம் பிரமனிடம் பெற்ற வரங்களில் அகப்படாத விசித்ர மூர்த்தியா யிருக்கிறதே! இதுவே எனக்குக் காலன்' என்று நடுங்கினான். அவர் அருகில் அணுக அஞ்சினான். எம்பெருமான் அவ்வஸுரனை, யானைமேல் பாயும் ஸிம்ஹம்போல் பாய்ந்து பிடித்து ஸம்ஹரித்தார். ப்ரஹ்லாத குமாரனோ,—அருள் மழை பொழியும் கமலக் கண்கள், பூர்ண சந்த்ரனை வெல்லும் அழகியசிங்க மதிமுகம், தன்னை அன்புடன் அணைக்கும் செந்தாமரைக் கைகள், அடைக்கலம் அடைந்தவர்களை ஆதரித்துக் காக்கும் செம்பொற் கழலடிகள்,—இத்திவ்ய ஸேவையையே ஸேவித்து, 'என்னப்பன் என்னை ரக்ஷிக்க வந்துதித்த அழகிய சிங்கப்பிரான்' என்றறிந்து, பக்திவெள்ளம் உள்ளடங்காமல், சரீரம் புளகிதமாய் நெஞ்சுருகிக் கண்ணீர் ததும்ப, வாக்கு தழுதழுக்க, மனத்தையும் கண்களையும் அவ்வாஶ்சர்ய உருவ மெடுத்த ஹரியினிடத்திலேயே நிலைநிறுத்தித் துதித்தான். தைர்யமாய் அவன் திருவடித்தாமரை நிழலில் போய்ப் புகுந்தான். கருணை சுரந்த கண்களால் சிறுவனைக் குளிரக் கடாக்ஷித்து வாத்ஸல்யம் ததும்ப எடுத்து மடியில் வைத்தணைத்தார் லக்ஷ்மீநரஸிம்ஹன்.

"அவ்வழகிய சிங்கப்பிரான், அனந்தன் கருடன் முதலிய நித்ய ஸூரிகளுக்கு, எவ்விதம் உண்ணும் சோறும் பருகும் நீரும் தின்னும் வெற்றிலையும் தானேயாய் ஸகல போகங்களையும் அருளுகிறானோ, அவ்விதமே எனக்கும் ஸகல இந்த்ரியங்களுக்கும் சப்தம் ஸ்பர்ஶம் ரூபம் ரஸம் கந்தம் முதலிய ஸுகங்களை அளித்தருளினான். அக்ருபாமூர்த்தியைத் தவிர எக்காலத்திலும் எனக்கு வேறு ரக்ஷகரில்லை" என்றருளிச்செய்தார் நம்மாழ்வார்.

அத்தகைய நிக்ரஹாநுக்ரஹ சக்தி வாய்ந்த ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ மூர்த்தியை ஆராதிக்கும் அழகிய சிங்கர்களும் அம்மஹிமையில் குறைந்தவர்களில்லை என்பதை விளக்கிக் காட்டும் ஆஶ்சர்ய சரிதங்களைப் பகவத் விஷய காலக்ஷேபம் ஸாதித்த எனது ஆசார்யன் அந்த ஸந்தர்ப்பங்களில் அருளிச் செய்வது வழக்கம். அத்திவ்ய செய்கைகளில் ஒன்றிரண்டை என் மந்தமதியில் தங்கிய அளவு விவரித்து எழுதத் துணிந்தேன்.

அத்திப்பட்டு என்னும் க்ராமத்திற்கும் திருவெவ்வுளூருக்கும் நடுவிலுள்ள மார்க்கம். திருமுடியில் பெருமாள் பெட்டி; தோளில் திருப்பக் குடலை; இடது கையில் செம்பு குளபாத்ரம்; வலது கரத்தில் நீண்ட மூங்கில் தடி; திருமார்பில் முப்புரிநூல்; பன்னிரண்டு திருமண் காப்பு; திருக்கழுத்தில் தொங்கும் தாமரை துளஸிமணி மாலைகள்; புஜங்களில் அலங்கரிக்கப்பட்ட சங்கு சக்கரங்கள். இவ்விதம் தேஜோபுஞ்ஜமாய் ஒரு ஸ்வாமி எழுந்தருளுகிறார். இடைப் பையன்கள் மந்தை மந்தையாய்ப் பசுக்களை மேய்க்கிறார்கள். பசுக்கள், தம் எதிரில் எழுந்தருளும் அம்மஹானுக்கு வழியை விட்டு விலகிச் செல்கின்றன. அதைக் கண்ட இடைப் பையன்களில் ஒருவனுக்கு ஆத்திரமும் கோபமும் பொங்குகின்றன. பசுக்களை அருகில் அழைத்தான். அவைகள் அசட்டையாய் வெகுதூரம் சென்றன. அவன், "ஏண்டா கோவாலா! இதென்னடா வம்பாயிருக்கு. நெதம் இந்த சாமி இப்படி நம்ம மாடுகளை வெருட்டி அடிக்கிறாரே. இவருக்கு என்ன இம்புட்டு கொயுப்பு. 'போறைப் போவுது போறைப் போவுது பாப்பான்' என்னு சும்மாயிருந்தால், ஓட ஓட வெரட்றதைப் பாரு! அவரை இன்னிக்கி என்ன பண்றேன் பாரு. அப்பறம் புத்தி வரும். எம் மயிலைக் காளை இருக்குதல்ல. அதைப் பாயவிட்டா அப்போ தெரியும் பாப்பானுக்கு" என்றான்.

அதைக் கேட்ட கோபாலன், "ஏண்டா கோயிந்தா உனக்கு இந்த புத்தி? கொயுப்பெடுத்து அலையரே. அப்படி செஞ்சா வீணாக் கெட்டுப்போவே. அந்த சாமியார் மொவத்தைப் பாரு. கோடி சூரியனைப்போல கண்ணைப் பறிக்குதே. கழுத்தில் துளசி மாலையும் பன்னிரண்டு நாமமும் பெருமாளைப்போல இருக்காரு. நீ நெஞ்சாலே நெனச்சதே தப்பு. அதை அந்த சாமி தெரிஞ்சுண்டு, உன்னைக் கல்லா மரமா சபிச்சுடுவாரு. அப்படிச் செய்யாதே" என்று வற்புறுத்தினான்.

அவன் சொல்லை அம்மட இடைப் பையன் ஏன் கேட்கப்போகிறான். 'விநாஶ காலே விபரீதபுத்தி:'. தோழன்மேல் சீறினான். "என்னடா பயங்காட்றே. நீ வெறுங் கோழை. அந்த சாமி நாம்ப பயந்தாங் கொள்ளீண்ணு பாத்துக்குணு, மேலே மேலே வெரட்டுது. ஒரு அடி ஒதுங்கிப் போவதில்லை. என்ன ஒய்யார நடை, சிங்கநடை, யானை நடை. நடக்கரதை பாரு. நம்மபோல மனிசந்தானே. பாப்பானை ஒசத்தியோ? எங்காளை எனக்கு அடங்குதா அவருக்கு அடங்குதா பாக்கறேன். அந்த சாமி புலியா சிங்கமா? என் ராஜாக் காளை புலியைக்கூடக் குத்திக் கிழிச்சுடும். பாரு அதன் ஸாமர்த்யத்தை" என்று கிளம்பினான். [தொடரும்]

ஸ்ரீ:

செய்திகள்

(1)

ஸ்ரீ அஹோபிலமடம் 36-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் வர்ஷ திருநக்ஷத்ர மஹோத்ஸவம், பாதூர்.

ஸ்ரீ அழகிய சிங்கர்களின் க்ருபர் விசேஷத்திற்குப் பாத்ரமான இவ்வூர் அக்ரஹார வாஸிகளால், ஸ்ரீ அஹோபிலமடம் 36-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளி யிருந்த ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ ஸ்ரீநிவாஸ யதீந்த்ர மஹாதேசிகனுடைய ப்ருந்தாவநத்தில், வழக்கம்போல் (21-7-44) ஆடி௴ 6௳ வெள்ளிக்கிழமை ஷை அழகிய சிங்கரின் வர்ஷ திருநக்ஷத்ர மஹோத்ஸவம் வெகு விமர்சையாய்க் கொண்டாடப்பட்டது. ஷை திருநக்ஷத்ரத்திற்காக ஆடி௴ 4௳ புதன்கிழமை காலையில் திவ்யப் பிரபந்த வேத பாராயண புராணாதிகள் உபக்ரமிக்கப்பட்டு, திருநக்ஷத்ர தினம் சாத்துமறை செய்யப் பட்டது. திருநக்ஷத்ர தினத்தன்று காலையில் ஸ்ரீ அழகிய சிங்கர் விசேஷ திருமஞ்ஜநம் கண்டருளி வீதிப்ரமணம் ஆகி, ஸ்ரீ ப்ரஸந்ந வேங்கடேசப் பெருமாள் ஸந்நிதிக்கு எழுந்தருளி, பெருமாள் தாயார் ஆண்டாள் தேசிகன் முதலான ஸந்நிதிகளில் அருளப்பாடிட்டுத் திருமாலை திருப்பரியட்டம் ஸ்ரீ சடாரி முதலிய மரியாதைகள் நடந்து, ப்ரதக்ஷிணமாக ப்ருந்தாவநத்துக்கு எழுந்தருளி விசேஷ தளிகை ஸமர்ப்பிக்கப்பட்டு, சாத்துமறை ஸம்பாவனைகள் நடந்து, எல்லோருக்கும் பெருமாள் தீர்த்தம் ஸ்ரீ பாததீர்த்தம் முதலியவைகள் ஸாதிக்கப்பட்டு, ஷை திருநக்ஷத்ர மஹோத்ஸவம் இனிது முடிந்தது. அன்று எல்லோருக்கும் விசேஷ ததீயாராதநம் நடந்தது. வா. ஸ்ரீரங்காசார்யன்.

---

(2)

ஸ்ரீஸந்நிதி திருவாராதநச் சுருக்கம்

இச் சிறு க்ரந்தம் நாம் வரப்பெற்றோம். இது, தஞ்சாவூரைச் சார்ந்த பெரும்புலியூர் அக்ரஹாரத்தில், ஸ்ரீ வத்ஸ குல திலகராய், கவிதார்க்கிக ஸிம்ஹாசார்ய திருவம்சத்தில் அவதரித்த ஸ்ரீ சேஷாத்ர்யாசார்ய ஸ்வாமி குமாரரும், ஸ்ரீ அஹோபில மட திவ்யாஸ்தாநத்தில் 38-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ திருக்குடந்தை அழகிய சிங்கரிடம் காலக்ஷேப ப்ரபதநங்கள் செய்துகொண்டு மஹா வைராக்யநிதியாய் எழுந்தருளியிருப்பவருமான தீக்ஷிதர் * ஸ்ரீ உப. நீலமேகாசார்ய ஸ்வாமியால், பூர்வாசார்யர்கள் அருளின க்ரந்தங்களினின்று தொகுத்துச் சுருக்கமாக எழுதப்பட்டு க்ரந்தாக்ஷரத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

இதில் ஷை திருவாராதநச் சுருக்கம் தவிர, ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார தனியன்கள், ஸ்ரீ பாஷ்ய தனியன்கள், பகவத்விஷய தனியன்கள், முப்பத்தாறாயிரப்படி தனியன், ஆகிய இவைகளும் அடங்கியுள்ளன. இதன் விலை அணா 4. வேண்டுமவர்கள் :— "K. ஸுதர்சநாசார்யர், 3, புஜங்கராவ் தெரு, சைதாப்பேட்டை (சென்னை)" என்ற விலாஸத்துக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

---

* 'ஸ்ரீ சடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹா தேசிகன்' என்பது ஷை ஸ்ரீ ஸ்வாமியின் துரீயாஸ்ரம திருநாமம்.

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

தாரண ௵ புரட்டாசி௴

1௳	சனிக்கிழமை	—	கந்யாரவி 20-29 ; ஷடசீதி : சூந்ய திதி.
2௳	ஞாயிற்றுக்கிழமை	—	மஹாளய அமாவாஸ்யை : சூந்ய திதி.
3௳	திங்கட்கிழமை	—	நவராத்ரி ஆரம்பம்.
9௳	ஞாயிற்றுக்கிழமை	—	ஸ்ரீமதாதி வண் சடகோப மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்
11௳	செவ்வாய்க்கிழமை	—	ஸ்ரீ ஹயக்ரீவாராதநம் [ஸரஸ்வதி பூஜை]
12௳	புதன்கிழமை	—	விஜயதசமி
13௳	வியாழக்கிழமை	—	ஸர்வ ஏகாதசி : ஸ்ரீமத் வேதாந்த தேசிகன் திருநக்ஷத்ரம்
15௳	சனிக்கிழமை	—	த்ரயோதசி - சதுர்த்தசி திதித்வயம்
16௳	ஞாயிற்றுக்கிழமை	—	பௌர்ணமாஸீ திதி
27௳	வியாழக்கிழமை	—	ஸர்வ ஏகாதசி
30௳	ஞாயிற்றுக்கிழமை	—	கந்யா க்ருஷ்ண சதுர்த்தசி திதி
31௳	திங்கட்கிழமை	—	தீபாவளி ; ஸர்வ அமாவாஸ்யை ; துலாரவி 47-51 ; கந்யா அமாவாஸ்யை திதி.

श्रीः

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

ஸ்த்ரீகளும் வித்யா ஸ்தாநங்களும்

ஸ்த்ரீகளுக்கு வித்யாஸ்தாநங்களில் அதிகாரமில்லை என்பதைப் பற்றி மதுராந்தகம் வித்வாந் ஸ்ரீ. உப. வீரராகவாசார்ய ஸ்வாமி மறுபடியும் ஒரு வ்யாஸத்தை அநுக்ரஹித்திருக்கிறார். அந்த ஸ்வாமியின் வ்யாஸங்களை யதாவஸ்திதமாக ப்ரசுரம் செய்யவேண்டு மென்னும் அபிஸந்தியிருந்தும், 'காகித ஸங்கோசத்தால் அப்படிச் செய்யக்கூடாமல் இருக்கின்றதே' என்று நாம் மிகவும் வருந்துகின்றோம். அவருடைய நிர்ணயமாவது, வேதாத்யயநம் போன்ற வித்யையில் ஸ்த்ரீகளுக்கு ஸர்வாத்மநா அதிகாரமில்லை என்பதே. ஸ்த்ரீகளுள் 'ப்ரஹ்மவாதிநீ' என்றும் 'ஸத்யோ வதூ' என்றும் இருவகை உண்டென்றும், அவர்களுள் ப்ரஹ்மவாதிநீ என்னும் வகுப்பினர்க்குப் பூர்வ கல்பத்தில் வித்யைகளில் அதிகார மிருந்த தென்றும், கலியுகத்தில் அந்த அதிகாரம் ஸ்த்ரீகளுள் எவ்வகுப்பினர்க்கும் கூடாதென்று பராஶர ஸ்ம்ருதி முதலியவைகளிற் சொல்லப்பட்டிருக்கிற தென்றும், யுகந்தோறும் சிற்சில தர்மங்களின் வ்யவஸ்தை மஹர்ஷிகளால் மாற்றப்படக் கூடும் என்னும் ந்யாயத்தை ஒத்துக்கொண்டிருக்கும் நாம் பராஶர ஸ்ம்ருதியில் காணப்படும் இந்த ப்ரதிஷேதத்தை அங்கீகரிக்கவேண்டு மென்றும், இம்மாதிரியான காரணங்களைக் கொண்டே நமது பெரியோர்கள் ஸ்த்ரீகளை வித்யாப்யாஸத்திலிருந்து விலக்கி வைத்திருக்கிறார்க ளென்றும் அந்த ஸ்வாமி அந்த வ்யாஸத்தில் விளக்கியிருக்கிறார். அந்த நிர்ணயத்தை ப்ராமாணிக மென்றே சொல்லவேண்டும்.

*　　　*　　　*　　　*

ஸ்ரீமத் பரகால ஸ்வாமியின் ஷஷ்ட்யப்த பூர்த்தி

மைஸூரில் ஸ்ரீ பரகாலமடம் என்று ப்ரஸித்தமாக் விளங்கிவரும் ஆஸ்தாநத்தில் முப்பத்து மூன்றுவது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜக ஸ்ரீமதபிநவ ரங்கநாத ப்ரஹ்மதந்த்ர பரகால மஹாதேஶிகனுடைய ஷஷ்ட்யப்த பூர்த்தி மஹோத்ஸவம் சென்ற ஆடி மாஸம் 4-உ யன்று மிக்க சிறப்புடன் நடைபெற்றதென்று கேட்க நாம் மிக்க ஆநந்தம் அடைகின்றோம். ஸ்ரீ ஸ்வாமியின் ஜ்ஞாநமும் அநுஷ்டாநமும் ஜகத் ப்ரஸித்தம். வித்யாபிவ்ருத்தியில் ஶ்ரத்தை ஏராளமானது. பாடசாலை ஒன்று அமைத்து, அதற்கு ஸ்ரீ ஸந்நிதியிலிருந்தே த்ரவ்ய ஸஹாயம் செய்து க்ரந்த காலக்ஷேபங்களைச் செய்விப்பதுடன், வேதம் ப்ரபந்தம் ஸாமாந்ய ஶாஸ்த்ரம் ஸாஹித்யம் முதலியவைகளையும் அததற்குத் தகுந்த வித்வான்களைக் கொண்டு வித்யார்த்திகளுக்கு ப்ரவசநம் செய்விப்பிக்கிறார். அநேக வித்வான்கள் இந்தப் பாடஶாலையிலிருந்து வெளிவந்திருப்பதை நாம் அறிவோம். ஸ்ரீ ஸ்வாமி சில க்ரந்தங்களைத் தாமே அநுக்ரஹித்திருப்பதாகவும் தெரிகிறது. ஸ்ரீ தேஶிகனுடைய ஸர்வார்த்த ஸித்திக்கு, 'பாவ ப்ரகாஶம்' என்னும் பெயருடன் ஒரு வ்யாக்யாநம் செய்தருளியிருக்கிறதாகவும், அது இப்பொழுது அச்சுப் பதிப்பிக்கப்பட்டு வருகிறதென்றும் கேள்விப்படுகின்றோம் 'ஔபநிஷத மணிஹாரம்' என்று உபநிஷதர்த்தத்தை அடக்கியுள்ள பத்ய ரூபமான ஒரு க்ரந்தத்தையும் அநுக்ரஹித்திருக்கிறாராம். இன்னும் இம்மாதிரி ஜகதுபகாரகமான அநேக க்ரந்தங்களை அநுக்ரஹித்துக்கொண்டும், வித்யா ப்ரசாரத்தை ஶாகோபஶாகமாக வளரச் செய்துகொண்டும், ஸ்ரீ ஸ்வாமி பல்லாண்டு பல்லாண்டாக எழுந்தருளி யிருக்குமாறு ஸ்ரீ ஶரண்யன் கடாக்ஷிக்க வேணுமென்று நாம் ப்ரார்த்திக்கிறோம்.

*　　　*　　　*　　　*

ஸ்ரீ கார்யம் ஸ்வாமியின் நிர்யாணம்

ஸ்ரீமத் அஹோபில மடம் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸந்நிதியில் பல ஸம்வத்ஸரங்களாக ஸ்ரீ கார்ய கைங்கர்யத்தை வஹித்து வந்த வித்வாந் அம்மணம்பாக்கம் ஸ்ரீ. உப. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, சென்ற ஆடிமீ 24உ யன்று கோயம்புத்தூருக் கடுத்த சிங்கநல்லூர் என்னும் க்ராமத்தில் பரமபத மடைந்தார் என்பதைக் கேட்டு நாம் மிகவும் துக்கிக்கிறோம். ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு ஸ்ரீ அழகியசிங்கர் மைஸூர் ஸம்ஸ்தாநத்தை உத்தேஶித்து யாத்ரையாக எழுந்தருளுகையில், மத்யே மார்க்கம் சாதுர்மாஸ்ய ஸங்கல்பம் ஸம்பவிக்க, அதன் காரணமாக அநேக ஆஸ்திக ஶிஷ்யர்கள் நிறைந்துள்ள சிங்கநல்லூர் என்னும் க்ராமத்தில் தங்கும் படியாக நேர்ந்தது. அவ்விடத்தில் இந்த ஸம்பவத்தை ஸ்ரீ ஶரண்யன் ஸங்கல்பித்துவிட்டான். ஸ்ரீ நரஸிம்ஹாசார்யர் சிறந்த வித்வான்; ஸாத்விகர்; உத்தமமான ஆத்மகுணம் நிறைந்தவர்; ஸ்ரீ அழகிய சிங்கருக்கு நித்யம் பஹிஶ்சர ப்ராணனாகவும் இருந்துவந்தார். ஸ்ரீ கார்ய கைங்கர்யத்தை எவ்வித படாடோபமு மின்றிக்கே, ஒருவருக்கும்

Regd. No. M. 4437

அத்ருப்தி ஜனிக்காதபடி நிர்வஹித்து வந்தார். அவர் இன்னும் பஹுகாலம் இந்த விபூதியில் எழுந்தருளியிருந்து இந்தக் கைங்கர்யத்தை மேன்மேல் ஶோபிக்கும்படி நிர்வஹித்து வருவாரென்று நாம் மனோரதித்திருந்தோம். பகவத் ஸங்கல்பம் அந்யதாவாக நேர்ந்துவிட்டது. ஸ்ரீஶரண்யன் சீக்ரத்திலேயே மற்றுமொரு ஸமர்த்த ஸாத்விகரை இந்த ஸ்தானத்தை அதிகரிக்குமாறு க்ருபை செய்ய வேண்டுமென்று நாம் ப்ரார்த்திக்கிறோம்.

*   *   *   *

அந்யாத்ருஶமான ஓர் ஸஹஸ்ர நாமார்ச்சனை

நிகழும் ஆவணி மீ 7உ யன்று [22-8-44] மயிலாப்பூரில் அர்ச்சாரூபியாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஸ்ரீநிவாஸப் பெருமாள் ஸந்நிதியில் ஒரு விஶேஷித்த உத்ஸவம் நடைபெற்றது. அன்று அந்யாத்ருஶமான ஒரு ஸஹஸ்ர நாமார்ச்சனையை ஸ்ரீ ஶரண்யன் கண்டருளினான். ஸ்ரீ தேசிகன் அநுக்ரஹித்துள்ள த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்னாவளியில் தென்படும் குணக்ருதமான திருநாமங்களை, ஸ்ரீ வேங்கடாத்ரி அகரம் அநந்தாசார்ய ஸ்வாமி ஒரு நாமாவளியாக அமைத்து அந்த அர்ச்சனையை நடத்திவைத்தார். அப்பொழுது அங்கு வந்திருந்த ஸேவார்த்திகளெல்லாரும் அந்த நாம ஸங்கீர்த்தநத்தின் வைபவத்தை அத்யாஶ்சர்யத்துடன் அநுபவித்தார்கள். ஸ்ரீ ஶரண்யனும் அந்த ஆராதநத்தை மிகுந்த உவப்புடன் திருவுள்ளம் பற்றினானென்றே நினைக்குமாறு அத்யத்புதமாக ஸேவை ஸாதித்தான்.

இப்படி ஸ்ரீ ஶரண்யன் திருவுள்ளம் குளிரும்படியாகவும், ஸேவார்த்திகளாக வந்திருந்த ஜனங்களெல்லாரும் ஆநந்தாநுபவம் செய்யும்படியாகவும் அபூர்வமான இந்தப் பாக்யம் வாய்த்ததற்குக் காரணம் ஸ்ரீமான் வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்காருடைய உத்ஸாஹமும் முயற்சியுமே. சற்றேறக்குறைய ஆறு வர்ஷம் முன் ஸ்ரீ காஞ்சீ நகரத்தில் அவர் நடத்திவைத்த ஸ்ரீ ராமாநுஜ தயாபாத்ரத் திருவவதாரக் கொண்டாட்டத்தின் ப்ரத்யபிஜ்ஞாபகமாகவும், ஸமீபத்தில் மைஸூர் ஸ்ரீ பரகால ஸ்வாமியின் ஷஷ்ட்யப்த பூர்த்தி மஹோத்ஸவத்தின் பரீவாஹமாகவும் இந்த உத்ஸவம் ஸங்கல்பிக்கப்பட்டது. ஸ்ரீ பரகால ஸ்வாமியின் ப்ரதிக்ருதி ஒன்றும் அன்று திறக்கப் பெற்றது. அநேக உத்ஸவங்கள் ஒன்றுசேர்ந்த இந்த வைபவத்தை அங்கு ஸந்நிஹிதர்களாக இருந்த எல்லோரும் அநுபவித்து ஆநந்தித்தார்கள்.

ஸ்ரீ:

பாதூர் ஸ்ரீ ப்ரஸந்ந வேங்கடேசப் பெருமாள் ஸந்நிதியில் லக்ஷார்ச்சனை.

பாதூர் ஸ்ரீ அலர்மேல்மங்கா ஸமேத ஸ்ரீ ப்ரஸந்ந வேங்கடேசப் பெருமாள் ஸந்நிதியில் லக்ஷார்ச்சனை உபக்ரமிக்கப்பட்டு ப்ரதிதினம் நடந்து வருகிறது. ஷ்ரீ அர்ச்சனையை ஆஸ்திக மஹா ஜனங்கள் எல்லோரும் வந்து ஸேவித்துப் பகவத் கடாக்ஷத்துக்குப் பாத்ர பூதர்களாகவேணுமாய் ப்ரார்த்திக்கிறேன். வா. ஸ்ரீரங்காசார்யன்

1944-ஆகஸ்ட் மாஸத்தின் சந்தா வரவு.

			ரூ.	அ.
137	ஸ்ரீ.	பி. எஸ். கோவிந்த ஐயங்கார், ஸ்ரீரங்கம் ...	3	0
185	,,	ஸ்ரீநிவாஸ ஸுந்தரம் ஐயங்கார், திருநெல்வேலி ...	3	0
263	,,	கே. ஸ்ரீநிவாஸன், திருமணம், தின்னனூர் ...	3	0
279	,,	எஸ். கோபாலஸ்வாமி ஐயங்கார், மயிலாப்பூர், சென்னை ...	3	0
294	,,	ஐ. ஸ்ரீநிவாஸாசார்யர், சைதாப்பேட்டை ...	1	0
460	,,	ஆர். ராம ஐயங்கார், பர்மா ஷெல், சென்னை ...	3	0
533	,,	வா. ஸ்ரீரங்காசாரியர், பாதூர் ...	3	0
622	,,	கே. ஸ்ரீநிவாஸ கோபால ஐயங்கார், ஹொஸூர் ...	3	0
623	,,	சேட்லூர் என். ஆர். ராஜகோபாலாசார்யர், கோயம்புத்தூர் ...	3	0
624	,,	எம். எஸ். கோவிந்தராஜன், கோயம்புத்தூர் ...	3	0
626	,,	வி. க்ருஷ்ணமூர்த்தி, குழிக்கரை ...	3	0
627	,,	எஸ். வி. ஸ்ரீநிவாஸன், சிங்கநல்லூர் ...	3	0

சென்ற ஜூன் மாஸம் 30உ ஸத்யமங்கலம் சேட்லூர் ஸ்ரீ. என். ஆர். ராஜகோபாலாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ மதுராந்தகம் ஸம்ஸ்க்ருத பாடஶாலைக்காக ரூ. 50 நன்கொடை அளித்தார். இது விஷயமாக நாம் அந்த ஸ்வாமிக்கு நமது க்ருதஜ்ஞதையை விண்ணப்பம் செய்து கொள்ளுகிறோம். [ஸம்பாதகர்]

Printed by K. Satakopachariar, at the Liberty Press, 10, Linghi Chetty Street. G.T., Madras.
Edited & Published by S. Vasudevachariar, 5, Ramaswami Street, Tyagarayanagar, Madras

21129